பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை
05 11 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இம்மாதம் 25-ஆம் தேதி தொடங்குகிறது.
2. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலையை குறைக்கும் நோக்கில் பாரத் ப்ராண்ட் அரிசி மற்றும் கோதுமை மாவு விற்பனையின் இரண்டாவது கட்டத்தை மத்திய உணவு அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி இன்று தொடங்கி வைத்தார்.
3. கோயம்புத்தூரில் 158 கோடி ரூபாய் மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப கட்டிடத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.
4. மலை கிராமங்களில் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், மாணவர்களின் தனித் திறனை வெளிக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.
5. சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி இன்று தொடங்கியது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இம்மாதம் 25-ஆம் தேதி தொடங்குகிறது.

புதுதில்லியில் இதனை தெரிவித்துள்ள நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 20-ஆம் தேதி வரை நடைபெறும் என்று கூறினார்.

நாட்டின் அரசியல் சாசன அமைப்பின் 75-வது ஆண்டு விழா நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அடுத்த மாதம் 26-ஆம் தேதி நடைபெறும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பாரத் ப்ராண்ட் அரிசி மற்றும் கோதுமை விற்பனையின் இரண்டாவது கட்டத்தை மத்திய உணவு அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தரமாக கிடைக்கும் வகையிலும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் நோக்கிலும் இந்த திட்டத்தை மத்திய அரசு தொடங்கி உள்ளது.

பாரத் ப்ராண்ட் கோதுமை மாவு பாக்கெட் கிலோ 30 ரூபாய்க்கும், பாரத் ப்ராண்ட் அரிசி ஒரு கிலோ பாக்கெட் 34 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி, ஏழை, எளிய மக்களின் நலனை கருத்தில் கொண்டு அரசு பல தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கூறினார்.

பாரத் ப்ராண்ட் கோதுமை மாவு-ம், அரிசியும் அதிக அளவில் சந்தையில் குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவற்றின் வரத்தால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை வெளிச்சந்தையில் கணிசமாக குறையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொதுமக்கள் பாரத் ப்ராண்ட் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மருத்துவத்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பல கோணங்களில் சிறப்பான பலன்களை அளிக்கும் என்று நித்தி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி கே பால் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் 18-வது மருத்துவ கருத்தரங்கில் உரையாற்றிய அவர், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நாட்டில் மருத்துவ கட்டமைப்புகளும், சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

நாட்டு மக்கள் ஆரோக்கியத்துடன் திடகாத்திரமாக இருந்தால்தான் பொருளாதாரம் உயர்நிலைக்குச் செல்லும் என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய திரு வி கே பால், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் பல்வேறு புத்தாக்க தொழில்களை கொண்டு வருவதற்கு மத்திய அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்களின் உற்பத்தி நாடாக இந்தியா திகழ வேண்டுமென்றும் திரு வி கே பால் கூறினார்.

**[]<<<>>>[]**

தனியாரிடம் உள்ள அனைத்து வகையிலான சொத்துக்களையும் பொது பயன்பாட்டுக்காக அரசு கையகப்படுத்த முடியாது என்று உச்சநீதிமன்றம் இன்று தெளிவுபடுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் 39-பி பிரிவின் கீழ் சில வகையான இடங்களை உரிமையாளர்களுக்கு திருப்பித்தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வு இதற்கான தீர்ப்பை வழங்கியுள்ளது.

**[]<<<>>>[]**

கோயம்புத்தூரை அடுத்த விளாங்குறிச்சியில் 158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப கட்டிடத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சிறிய நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இடம் அளிக்கக்கூடிய அளவில் இந்த தொழில்நுட்பக் கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பல நிறுவனங்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

இதன்மூலம் மூவாயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டத்திற்கான நிலமெடுத்தல் நடவடிக்கைகள் திரும்பப்பெறப்பட்டதை அடுத்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் 468 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆணைகளை முதலமைச்சர் நில உரிமையாளர்களுக்கு வழங்கினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் மலை கிராமங்களில் உள்ள பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், மாணவர்களின் தனித் திறனை வளர்க்கவும் மாநில அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளை இன்று ஆய்வு செய்த அமைச்சர், கலாச்சாரம் மற்றும் பண்பாடு உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்கான பயிற்சியும் மாணவ மாணவியருக்கு அளிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில் மக்கள் தங்களை தற்காத்துக் கொள்வது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பாளையங்கோட்டையில் பேரிடர் பயிற்சி ஒத்திகை இன்று நடைபெற்றது.

தேசிய பேரிடர் மீட்புக்குழு, தீயணைப்புத்துறை, காவல்துறை ஆகியவற்றை சேர்ந்தவர்கள் பேரிடரில் சிக்கியவர்களை மீட்பது தொடர்பாக காட்சிகளை தத்ரூபமாக செய்து காண்பித்தனர்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக ஆட்சியர் திரு கார்த்திகேயன் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - கார்த்திகேயன் ) --- 30 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --- 50 செகண்ட்*

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அரசு தலைமை மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சித்த மருத்துவ பிரிவு கட்டிடங்களை மாநில அமைச்சர்கள் திரு மா சுப்ரமணியன், திரு சிவசங்கர் ஆகியோர் இன்று திறந்து வைத்தனர்.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலய கார்த்திகை தீபத் திருவிழாவிற்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் இன்று அனைத்துத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்ட வேளாண்துறை சார்பில் இம்மாதம் நடைபெறவுள்ள சிறப்பு மண் பரிசோதனை முகாமில் விவசாயிகள் பங்கேற்று பயனடையுமாறு ஆட்சியர் திருமதி உமா கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நெல்லை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக சாலையில் திரியும் மாடுகளின் உரிமையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேயர் திரு ராமகிருஷ்ணன் எச்சரித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாமில் நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

**[]<<<>>>[]**

திருவாரூர் மாவட்டம் செருமங்கலம் ஊராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ நேரில் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக குன்னூர் மற்றும் வெலிங்டன் இடையே ரயில் பாதையில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் குன்னூர் - உதகை இடையேயான மலைரயில் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட 160 கிலோ கடல் அட்டை மற்றும் ஆயிரத்து 500 கிலோ பீடி இலைகளை க்யூ பிரிவு காவல்துறையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

**[]<<<>>>[]**

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி இன்று தொடங்கியது.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இப்போட்டி வரும் 11-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, விதித் குஜராத்தி, தமிழகத்தைச் சேர்ந்த அரவிந்த் சிதம்பரம், உள்ளிட்ட எட்டு வீரர்களும், சேலஞ்சர்ஸ் பிரிவில் தமிழகத்தின் கார்த்திகேயன் முரளி, வைஷாலி, ப்ரணவ் வெங்கடேஷ், ப்ரணேஷ் முனிரத்னம் உள்ளிட்ட எட்டு பேரும் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ஜெய்ப்பூர் – உத்தரபிரதேச அணியையும், மும்பை – தில்லி அணியையும் எதிர்கொள்கின்றன.

***End of News***